முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திருநீலநக்க நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

23.12.2018, ஞாயிற்றுக்கிழமை

1. **தரும பலம் கொண்ட ஞானியே**
**தவசியே ஆறுமுக அரங்கனே**
**வருமுலகில் மக்களெல்லாம் வணங்கி**
**வடிவேலா முருகா அரங்கா என செபித்து**

2. செபித்து நித்ய பூசை செய்ய
செப்பிட அன்னதானம் தொடர
அபயமென ஏற்று அரங்க ஞானி
அருள் பார்வை பெற்றவர்களெல்லாம்

3. எல்லோரும் தேற்றமடைவரெனக் கூறி
இயம்புவேன் ஒளி சூட்சும நூலை
வல்லமைபட **விளம்பி தனுர் திங்கள்**
**வழுத்திடுவேன் அட்டமதிகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 8ம் நாள் 23.12.2018, ஞாயிற்றுக்கிழமை)**

4. வாரமதில் **திருநீலநக்க நாயனாரும்**
வழங்கிடுவேன் உலகோர் நலம்பெற
பாரதமெங்கும் இயற்கை சக்தி
பசுமை வளம் பெருக்கி வர

5. வருகவே இனி வரும் காலம்
வல்லமைபட பேரிடராக வாராதிருக்க
தரும பலம் பெருக்குவதுடன்
தன்னல போக்கை மாற்றிக் கொண்டு

6. கொண்டுமே பொதுநலம்பட வாழ்ந்து
குறையிலா சமூக அக்கறைபட
தொண்டு வழி மக்களெல்லாம் சேர்ந்து
தேசிகனார் தொண்டர்களாகி வர

7. வருகவே இயற்கை பாதுகாப்பும்
வளமான நீர்நில வளமும் கூடும்
முருகப்பெருமானே தலைவனெனும்
முழுமை ஞான வழிகட்கு வந்து

8. வந்துமே தீட்சைதனை அரங்கனிடம்
வணங்கி ஏற்றுத் தொடர
சிந்தை தெளிவு சூட்சுமம் விளங்கி
செந்தில்வேலன் துணைபட வாழ்வர்

9. வாழ்வினில் நல்ல இல்லறமும்
வாரிசும் வேண்டி நிற்பவர்க்கு
ஊழ் நீங்கி தருமபலமும் கூடி
உயருமே வாழ்வாதார வளர்ச்சிகளும்

10. வளமான பாதுகாப்பான வாழ்வாய்
வஞ்சம் பிணி அணுகா ஏற்றமாக
பலமான சுற்றமும் நட்புகளும்
பணிவான துணைகளும் உறவுகளும் பெருகி

11. பெருகியே முருகப்பெருமான் ஆளும்
பேதமிலா ஞான ஆட்சி மலரும்
பெருமைபட மக்கள் வாழ்வு மாறும்
பேதமென்பதில்லா சமதர்ம யுகமாகும் ஒளி சூட்சும நூல் முற்றே.

—சுபம்—